# DEPOSITION OF WITNESS
**(Chapter X X I I I Code of Criminal Procedure)**

\- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

**IN THE COURT OF DISTRICT MUNSIF - CUM JUDICIAL MAGISTRATE THIRUPPUVANAM**

Calender Case :
Miscellaneous : Case No: CC. No.266/**2024**
Preliminary Register :
Sessions :
Deposition of Witness for Prosecution : PW11
Defendant :
Court :

Name : முகமது தாரிக்குல் அமீன் – காவல் ஆய்வாளர்
Father' s Name : அகமது சித்திக்
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of

---

17.06.2026 CC. No.266/**2024** அ.சா.11 முகமது தாரிக்குல் அமீன் –காவல் ஆய்வாளர்

(சாட்சி காணொளி வாயிலாக சாட்சியம் அளிக்கிறார்)

(1,2 எதிரிகள் ஆஜர்.3ம் எதிரி ஆஜர் இல்லை. அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர் மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் )

**முதல் விசாரணை:**

1) நான் தற்போது கன்னியாகுமரி மாவட்டம் கருங்கல் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு கடந்த 14.09.2012 அன்று காலை 11.00 மணியளவில் பூவந்தி காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளர் பொறுப்பு பணியில் இருந்தபோது தலைமைக்காவலர் 1231 என்பவரால் பதிவு செய்யப்பட்டு என் பார்வைக்கு மனுரசீது எண். 322/12 என்பதை பார்வையிட்டு அதன் தன்மைகேற்ப பூவந்தி காவல் நிலைய குற்ற எண். 145/12 இதச பிரிவுகள் 294(பி), 323, 324, 506(2) ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். **மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2) மேற்படி புகார் மனுவின் அசலையும் முதல் தகவல் அறிக்கையினையும் இணைத்து கணம் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2, சிவகங்கை

R VENKADESH PRASANTH
Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.06.17 17:57:27 +0530

நீதிமன்றம் அவர்களுக்கு அனுப்பியும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன்.

3) பின்னர் இவ்வழக்கை நான் எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினம் மதியம் 12.00 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் வெள்ளைச்சாமி, முனிச்சாமி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தேன். பின்னர் பார்வை மகஜரில் மேற்படி சாட்சிகள் கையொப்பம் பெற்றேன். **மேற்படி பார்வை மகஜர் அ.த.சா.ஆ.8 மற்றும் மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.9 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**.

4) பின்னர் இவ்வழக்கின் பட்டியல் சாட்சிகளான ராஜதுரை, சமயதுரை, செல்வம், தன்னம்மாள், வெள்ளையன், அழகர்சாமி மற்றும் மகஜர் சாட்சிகள் ஆகியோரை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சிகளின் விசாரணையில் சம்பவம் உண்மை என தெரியவந்ததால் இவ்வழக்கின் எதிரிகளை தேடி வந்த நிலையில் எதிரிகள் மூன்றுபேரும் மாண்புமிகு மாவட்ட அமர்வு நீதிமன்றம் சிவகங்கையில் 17.09.2012ம் தேதி முன்பிணை பெற்று தக்க பிணையில் சென்றுவிட்டதால் அவர்களை கைது செய்ய இயலவில்லை. அதன்பின்பு நான் பணிமாறுதலாகி சென்றுவிட்டதால் சார்பு ஆய்வாளர் திரு.ஜெயச்சந்திரன் என்பவரிடம் வழக்குகோப்பை ஒப்படைத்தேன்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>:**

புகார் மனுவை நான் பெற்றேனா என்றால் நான் பெறவில்லை தலைமைக்காவலர் 1231– குண்டுமலை பெற்றார். புகார் மனுவை பெற்றதிலிருந்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய ஒரு நாள் கால தாமதம் ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் இவ்வழக்கில் சரிவர புலன் விசாரணை செய்யாமல் சாட்சிகளை விசாரணை செய்யாமல் மேல் அதிகாரிகளின் வேண்டுகோளுங்கிணங்க இவ்வழக்கை எதிரிகள் பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எவ்விர சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. பார்வை மகஜர் சாட்சிகளை நான் சம்பவ இடத்தில் வைத்து விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சொன்ன விதத்தில் சாட்சிகளை விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me in open court readover/ interpreted to the witness in Tamil and acknowledged by him/ her to be correct.

சாட்சியின் கையெப்பம்:

R VENKADESH PRASANTH
Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.06.17 17:57:33 +0530

District Munsif Cum Judicial Magistrate,
Thiruppuvanam.